www.tamilarangam.net

# ஜெயவர்த்தனேயிடம் ராஜீவ் கண்டிப்பு

## ராணுவ நடவடிக்கையை நிறுத்தும்வரை சமரச முயற்சி இல்லை

மாசி/87.

## இலங்கை தமிழர் பிரச்சினையில் திடீர் திருப்பம்

# ஈழத் தமிழர்களுக்கு இந்தியா பகிரங்க ஆதரவு

இலங்கை அரசு மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கை காரணமாக ஈழத்தமிழர்கள் நடத்தும் போராட்டம் நீடிப்பதுடன் மேலும் தீவிரப்படும் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார், ராஜீவ்காந்தி.

"ஈழப் போராளிகளின் போராட்டம் தீவிரப்படலாம்" என்றோ, "நீடிக்கப்படலாம்" என்றோ சொல்லாமல் "தீவிரப்படும்", "நீடிக்கும்" என்ற வாசகங்களை ராஜீவ்காந்தி பயன்படுத்தியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது.

ராஜீவ்காந்தியின் கடுமையான எச்சரிக்கை கடிதத்தை நேற்று ஜெயவர்த்தனேவிடம் இந்திய தூதர் தீட்சித் கொடுத்தார்.

அந்த கடிதத்தில் ராஜீவ்காந்தி கூறியிருப்பதாவது:—

(1) யாழ்ப்பாணம்-மன்னார்-திரிகோணமலை ஆகிய வடக்கு-கிழக்கு மாநிலங்களில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டிருக்கும் ராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும்.

(2) யாழ்ப்பாணத்தின் மீது "பொருளாதார முற்றுகை" நடத்துவதை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

(3) அம்பாறை மாவட்டத்திலிருந்து சிங்களப் பகுதியை தனியாகப் பிரித்து விடத்தயார் என்று டிசம்பர் 19-ந்தேதி ஜெயவர்த்தனே வெளியிட்ட யோசனை வாபஸ் வாங்கப்பட்டதை கைவிட வேண்டும்.

(4) இந்த மூன்று யோசனைகளையும் ஏற்க மறுத்து ராணுவ நடவடிக்கையை தொடர்ந்தால் ஈழப்போராளிகள் நடத்தும் போராட்டம் தொடரும். போராட்டம் தீவிரமாகவும் நடைபெறும்.

இவ்வாறு ஜெயவர்த்தனேக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் ராஜீவ்காந்தி தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய மக்களின் ஒன்றுபட்ட ஆதரவு ஈழத் தமிழர்களுக்குத்தான் என்றும் அந்தக் கடிதத்தில் ராஜீவ்காந்தி அறிவித்திருக்கிறார்.

ராணுவ நடவடிக்கை சூழ்நிலையில் எந்த சமரச திட்டத்தையும் ஏற்கும்படி தமிழ்ப் போராளிகளிடம் நாங்கள் யோசனை கூறவோ, வற்புறுத்தவோ முடியாது என்றும் ராஜீவ்காந்தியின் கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"ராணுவ தீர்வு கூடாது. அரசியல் தீர்வுதான் வேண்டும்" என்று இந்தியா கூறும் யோசனையை புறக்கணித்து ராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு தீவிரப்படுத்தியிருப்பதால், இந்த கடுமையான எச்சரிக்கை கடிதத்தை ராஜீவ் அனுப்பியிருக்கிறார்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசையும், ஈழத்தமிழர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்காமல், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ராஜீவ் கடிதம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர்களின் போராட்டம் "நீடிக்கும்" என்றும், "தீவிரப்படும்" என்றும் ராஜீவ் கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக தமிழக அரசியல் தலைவர்கள் கருதுகிறார்கள்.

### தமிழர் போராட்டம் "தீவிரமாக தொடரும்" என்று எச்சரிக்கை

---

'பிளாட்' தலைவர் அறிக்கை

# ஈழவிடுதலை அமைப்புகள் ஒன்றுபட கோரிக்கை

சென்னை, பிப். 14—

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வுகள், சமரசத் திட்டங்கள் இலங்கையிலுள்ள எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் அமைய வேண்டும்; அப்போதுதான் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ('பிளாட்') செயலதிபர் உமாமகேஸ்வரன் என்ற முகுந்தன் கூறியுள்ளார்.

சென்னையில் புதனன்று நிருபர்களிடம் பேசிய அவர், "தற்போது இலங்கை அதிபர் ஜெயவர்த்தன சமரச யோசனைகளுக்கு இசைவு தெரிவித்துவிட்டு அதற்குப் புறம்பான விதத்தில் இலங்கையின் தென் பகுதியில் பேசி வருகிறார். சிங்கள மக்களிடம் தன் செல்வாக்கு குறைந்து, எதிர்க்கட்சிகள் ஆதரவு பெற்றுவிட இந்த திட்டங்கள் வழியமைக்கும் என்ற எண்ணத்தில் 'அரசியல் லாபம்' கருதியே அவர் முரண்பட்டுப் பேசுகிறார்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் அனைத்து ஈழ விடுதலை அமைப்புகளும் ஒன்றுகச் சேர வேண்டியிருக்கிறது என்றும் முகுந்தன் கூறினார். இந்த ஒற்றுமை வெறும் பேச்சளவில், விளம்பரத்துக்காக இல்லாமல் அடிப்படை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற சில அமைப்புகளிடையே ஏகாதிபத்திய சக்திகள் ஊடுருவியுள்ளன. இதன் விளைவாக, எல்டிடிஈ பிற இயக்கங்களைப் பலவீனப்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

### கடத்தல் சம்பவங்கள்

தமிழ்நாட்டில் சில கடத்தல், துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களில் தங்களது இயக்கம் எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை என்று முகுந்தன் மறுத்தார்.

கடந்த புதனன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தொடர்ந்து போலீஸார் தங்களது ('பிளாட்') இயக்கத்தைச் சேர்ந்த மேலும் நால்வரைப் பிடித்து, விசாரணை நடத்தினர் என்றும் அவர் கூறினார்.

"இதுபோன்ற குற்றச் செயல்களை முதலில் ஆரம்பித்ததே எல்டிடிஈ தலைவர் பிரபாகரன்தான்" என்றும் அவர் குறை கூறினார்.

"அந்த அமைப்பின் செயல்களை மட்டும் நாங்கள் விமர்சிக்கிறோமே தவிர, அவர்களும் அங்கீகரிக்கப்பட வேண்டிய ஈழ விடுதலை இயக்கம்தான்" என்றும் அவர் கூறினார்.

---

## இலங்கை தமிழருக்கு ஆதரவாக நேற்று தமிழ் நாட்டில் தி. மு. க. ஆர்ப்பாட்டம்

17.02.87. சென்னை,

இலங்கைத் தமிழர்கள் பெரும் அளவில் இன்னல்களுக்கும் படுகொலைகளுக்கும் ஆளாகி வருவதாகக் கூறி திராவிட முன்னேற்றக் கழகம் திங்களன்று சென்னையில் ஓர் கண்டனப் பேரணியை நடத்தியது.

மெரினா கடற்கரையில் அண்ணா சமாதியிலிருந்து பிற்பகலில் இக் கட்சியின் தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமையில் புறப்பட்ட இந்தப் பேரணி அண்ணா அறிவாலயம் சென்றடைந்தது.

இதே வேளையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் தலையிடுமாறு இந்தியா அரசாங்கத்தையும் தமிழ் நாடு மாநில அரசையும் கோரி மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் ஜனதா கட்சி குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இது தொடர்பாக மகஜர் ஒன்றையும் இவர்கள் மாவட்டாட்சித் தலைவரிடம் கையளித்துள்ளனர்.

---

21.02.87.

## 'எனது வரலாற்றை மக்கள் அறிவர்' -அமிர்

(அன்டன் எட்வேர்ட்)

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ.அமிர்தலிங்கத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மரணதண்டனை விதித்துள்ளதாக இலங்கை பத்திரிகை ஒன்றை மேற்கோள் காட்டி தமிழக செய்தித் தாள்களிலும் செய்தி பிரசுரமாகியுள்ளது என்று திரு. அமிர்தலிங்கமே தொலைபேசி மூலம் நேற்று தெரிவித்தார்.

இது குறித்து அவரிடம் கேட்டபோது, 'எனது வரலாற்றை மக்கள் அறிவர். இதற்கு மேல் நான் எதுவும் கூறவிரும்பவில்லை' என்றார்.

www.tamilarangam.net

# கிளிநொச்சியில் 9 நாளாக தாக்குதல்: 150 பேர் பலி

"வெள்ளியன்று காலை கிளிநொச்சியில் மூன்று குண்டு வீச்சு விமானங்கள் உருத்திபுரம், விசுவமேடு ஆகிய பகுதிகளில் பல குண்டுகளை வீசித் தாக்கின. பீரங்கிக் குண்டு வீச்சிலும் விமானக்குண்டு வீச்சிலும் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்தவர்கள் மட்டுமின்றி பல இதரர்களும் ராணுவத்தின் கத்திவெட்டுக்கும் வாள்வெட்டுக்கும் இலக்காகி கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களை அந்தந்த இடத்திலேயே அக்கினித் திராவகம், டயர் முதலியவை போட்டுக் கொளுத்தியுள்ளனர். பரந்தனில் மக்கள் வங்கி, அஞ்சல் அலுவலகம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டிடம், இரசாயனத் தொழிற்சாலை ஆகிய நான்கு கட்டிடங்களில் 1500க்கும் அதிகமான ராணுவத்தினர் தற்காலிகமாக முகாமிட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் கறுப்பு உடை அணிந்துள்ளனர். அவர்கள் பாகிஸ்தானில் விசேஷ பயிற்சி பெற்றவர்கள்.

அந்தப் பகுதிக்கு உணவு, மருந்து வகைகளை வாகனங்களில் எடுத்துச் செல்ல ராணுவம் தடை விதித்துள்ளது. அங்குள்ள கடைகள் ராணுவத்தினரால் உடைக்கப்பட்டு சூறையாடப்படுகின்றன. அதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். பொதுமக்கள் சகல பொருட்களையும் கைவிட்டுவிட்டு மூட்டை முடிச்சுகளுடன் உள் கிராமங்களுக்கு சென்று கொண்டிருக்கின்றனர். வவுனியா மாவட்டத்தில் உள்ள இரணை இலுப்பைக்குளம், வேலங்குளம், பூவரசங்குளம் ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்த ராணுவத்தினர் வெள்ளியன்று அராஜகத்தில் ஈடுபட்டனர். அங்கு ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதால் இறந்த பொதுமக்களைப் பற்றிய விவரம் தெரியவில்லை. வவுனியாவிலிருந்து முல்லைத் தீவை நோக்கி ஆயிரத்திற்கும் அதிகமான ராணுவத்தினர் சென்று கொண்டிருக்கின்றனர். அந்த தரைபடைக்கு பாதுகாப்பாக குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகாப்டர்களும் கூடவே செல்லுகின்றன"

"மன்னார் மாவட்டத்தில் பெருவாரியான தமிழ் அகதிகள் தஞ்சம் அடைந்திருந்த மடு என்னும் பிரசித்தி வாய்ந்த கிறிஸ்துவ மத வழிபாட்டு தலத்திலிருந்து ஆயிரம் அளவிலான அகதிகள் மற்றும் அகதிகள் முகாம் இருக்கின்ற திருக்கேதீச்வரம், மாந்தை ஆகிய வரலாற்றுப் புகழ்மிக்க சைவ வழிபாட்டு இடங்களை நோக்கி செல்ல ஆரம்பித்துள்ளனர். அவ்வாறு செல்லும்போது பொதுமக்களை "மனிதக் கேடயங்களாக" முன்னே செல்லவிடுகிறார்கள்.

இலங்கை ராணுவத்தின் தாக்குதலில்

# மன்னார் பகுதியில் 80 பொதுமக்கள் சாவு:

சென்னை, பிப். 10—

"இலங்கை ராணுவத்தின் பயங்கரவாதம் கொடூரமான முறையில் தொடருகிறது. மன்னார் பகுதியில் 80க்கும் அதிகமான பொதுமக்கள் ராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். மூன்றாவது நாளாக மன்னாரில் நடைபெற்ற சண்டையில் 14 ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பல ராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்;

இலங்கை ராணுவச் சண்டை விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது 'நாபாம்' குண்டுகளை வீசியுள்ளன. முப்பதுக்கும் அதிகமான வீடுகள் சாம்பலாயின. எரிந்த வீட்டுக்குள் பலர் சிக்கி இறந்தனர்"

"மடுக்கோவிலில் தஞ்சமடைந்த 500-க்கும் மேற்பட்ட அகதிகளை ராணுவப் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்துள்ளதோடு ராணுவம் நகரும் போது பொதுமக்களை முன்னே செல்லவிட்டு பின்னால் நகருகின்றனர். இது தவிர அகதிகளாக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கும் மேலான தமிழ் மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்து பட்டினியால் வாடுகின்றனர்.

"முருங்கன், பறயனாலங்குளம், சிலாவத்துறை, மன்னார் தள்ளாடி ஆகிய ராணுவ முகாம்களிலிருந்து புறப்பட்ட 4000-க்கும் அதிகமான ராணுவத்தினர் 15 மைல் சுற்றளவான பகுதிகளில் உள்ள கிராமங்களான பண்டிவிரிச்சான், பரப்புக்கடந்தான், உயிலங்குளம், மாந்தை, திருக்கேதீஸ்வரம் ஆகிய கிராமங்கள் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதில் மோசமாக பாதிக்கப்பட்ட மன்னாரில் எண்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் ராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். மன்னாரில் ராணுவம் கற்பழிப்பு, கொலை, கொள்ளை தீவைப்பு போன்ற அராஜகச் செயல்களில் ஈடுபட்டுள்ளது. குழந்தைகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்; பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் கோவிலில் தஞ்சம் புகுந்த 18 பேரை கடத்திச் சென்ற ராணுவத்தினர் அவர்களை சுட்டுக் கொன்றுள்ளனர்"

மனி/87.

"இலங்கை ராணுவம் தொடர்ந்து முன்னேறுகிறது"

# முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் 36 மணி நேர ஊரடங்கு

கொழும்பு, பிப். 11—

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களில் 36 மணி நேர ஊரடங்கு உத்தரவை இலங்கை அரசு புதன்கிழமையன்று அமல் செய்தது. புதன்கிழமை மாலை 6 முதல் வெள்ளிக்கிழமை காலை 6 மணி வரையில் ஊரடங்கு உத்தரவு அமலில் இருக்கும்.

ஊரடங்கு உத்தரவு ஏன் விதிக்கப்பட்டது என்று இலங்கை அரசின் அறிக்கை காரணம் எதுவும் குறிப்பிடவில்லை. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களிலும், மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகியவற்றிலும் சென்ற ஒரு வார காலமாக தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக இலங்கை ராணுவம் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

தமிழ்ப்பகுதிகள் தாக்கப்பட்டாலும்

# தாயகம் திரும்பும் இலங்கை அகதிகள் தொகை அதிகரிப்பு

ராமேசுவரம், பிப். 11—

ராமேசுவரம் துறைமுகத்தை அடுத்த ஒரு சிறிய படகுத் துறையிலிருந்து மீன்பிடி படகுகளில் இலங்கை அகதிகள் தலைமன்னார் திரும்பத் துவங்கியுள்ளனர். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மீன்பிடி படகில் நெருக்கியடித்து அமர்ந்து செல்ல வேண்டியுள்ளது.

சில பெண்கள் கைக் குழந்தைகளுடன் காணப்பட்டனர். 6 மீனவர்களுக்கான அப்படகில் சுமார் 50 பேர் செல்கின்றனர். கடும் வெய்யிலில் 5 மணி நேரப் பயணத்திற்குப் பின் அவர்கள் தலைமன்னாரை அடைவார்கள்.

கடந்த 2 அல்லது 3 ஆண்டுகளில் இந்தியாவுக்கு ஏராளமான இலங்கை அகதிகள் வந்தனர். தமிழ்நாட்டில் அவர்களுக்கு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. முகாம்களில் வேலையின்றி தங்கியிருப்பதில் ஏற்பட்ட சலிப்பும், உறவினர்கள் இலங்கை திரும்புமாறு அனுப்பும் கடிதங்களும் காரணமாக பலர் தாயகம் செல்வதாகக் கூறுகின்றனர்.

இந்திய முகாம்களில் தங்களுக்கு அளிக்கப்படும் ரூ. 110 மாதாந்திர உதவித் தொகை வாழ்க்கைச் செலவுக்குப் போதவில்லை என அகதிகள் கூறுகின்றனர்.

# யாழ்நகரில் சைக்கிளுக்குகிராக்கி விலையும் உயர்வு

யாழ் நகர்,

யாழ்ப்பாணத்தில் எரிபொருள்தடையாலும் அதன் விலை உயர்வாலும் சைக்கிள்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் அதன் விலையும் அதிகரித்துள்ளது. முன்பு ரயில் பெட்டிகள் போல ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் சென்ற வீதிகளில் தற்பொழுது சைக்கிள் பவனியைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இ. போ. ச. பஸ்களும் சில முக்கிய வீதிகளில் மாத்திரமே சேவையை நடத்தி வருகின்றன. மினி பஸ்சேவையும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இதனால் ஆண்களும் பெண்களும் தற்பொழுது சைக்கிள்களைப் பாவிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சைக்கிள் இல்லாதவர்கள் அதை வாங்குவதிலும், ஓட்டத் தெரியாதவர்கள் ஓடிப் பழகுவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

# மக்கள் குடியிருப்பு பகுதிகளில் விமானங்கள் தீக்குண்டு வீச்சு

# இலங்கையில் பயங்கர யுத்தம்

**Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT) BM Box 7313, London WC1 3XX**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்